பிரசங்கம் இலக்கம்: 5. வேதப் பகுதி: சங்கீதம் 13:1-6

## மனவேதனையை மாற்றிடும் மன்றாடல்

கிறிஸ்தவ வாழ்க்கை பாடுகளுக்கும் வேதனைகளுக்கும் ஊடாகச் செல்லும் கடினமானதாக இருந்தாலும், தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு ஆறுதலையும் மனச்சமாதானத்தையும் தருகிறவராக இருக்கின்றார் (2கொரி.1:4, யோவா.14:27). நாம் நம்முடைய உள்ளத்தின் வேதனைகள் அனைத்தையும் ஜெபத்தில் தேவனிடம் தெரிவிக்கும்போது நமக்கு மனஆறுதலும் சமாதானமும் கிடைக்கிறது (பிலி.4:6-7). 13ம் சங்கீதம் இதை அனுபவரீதியாகக் காண்பிக்கின்றது.

13ம் சங்கீதத்தில் மனக்கவலையுடன் இருந்த தாவீது (சங்.13:1-2), தன்னைக் காப்பாற்றும்படி தேவனிடம் மன்றாடுகிறான் (சங்.13:3-4). இது அவனுடைய உள்ளத்தில் பெரியதோர் மாறுதலை ஏற்படுத்தியது. மனக்கவலையுடன் இருந்த அவன் மனஆறுதல் அடைந்தவனாக, தேவன் தன்னை விடுவிப்பார் என்னும் நம்பிக்கையில் மகிழ்ச்சியுடன் தேவனை மகிமைப்படுத்திப் பாடுகின்றான் (சங்.13:5-6). ஜெபம் மனிதனின் உள்ளத்தின் நிலையை மாற்றுகிறது என்பதற்கு இது சிறந்த விவரணமாக உள்ளது.

### 1. தாவீதின் மனக்கவலை (13:1-2)

தேவன் தன்னைக் கைவிட்டுவிட்டார் என்னும் எண்ணத்தோடு தாவீது இருந்தான். தேவன் அவனை இஸ்ரவேலின் அரசனாக்குவதாக வாக்களித்திருந்தாலும், அவன் இன்னும் அரசனாக முடிசூட்டப்படவில்லை. சவுல் தாவீதைக் கொலைசெய்வதற்காக, மக்களை அனுப்பியிருந்தான். தாவீது உயிருக்குப் பயந்து காடுகளிலும் மலைகளிலும் ஒளிந்து கொண்டிருந்தான். இதனால், தேவன் தன்னைக் கைவிட்டுவிட்டார் என்னும் எண்ணம் தாவீதுக்கு ஏற்பட்டது.
13:1. “முகத்தை மறைத்தல்” என்பது, தேவனால் கைவிடப்பட்டதையும், தேவனுடைய சாபத்திற்கு உட்படுவதையும் குறிப்பிடும் விவரணம் (சங்.30:7, 44:24, 88:14). முகத்தைப் பிரகாசிக்கச் செய்வது ஆசீர்வாதத்திற்கான விவரணம் (எண்.6:25-26, சங்.4:6, 31:16, 67:1, 80:3,7,19). தேவன் வாக்களித்த பாதுகாப்பு, கிருபை, சமாதானம் என்னும் ஆசீர்வாதங்கள் (எண்.6:25-26) எங்கே என்று தாவீது அங்கலாய்ப்பவனாக இருந்தான்.

# தேவன் தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றாமல் தன்னுடைய எதிரியின் கை ஓங்கும்படி செய்வதனால் அவர் தன்னைக் கைவிட்டுவிட்டார் என்றே தாவீது எண்ணினான். தான் நன்மை செய்தும் தேவன் தன் பக்கம் இராமல், தீமை செய்யும் தன்னுடைய எதிரியின் பக்கம் இருப்பதாக அவன் நினைத்தான். இத்தகைய நிலைமை எவ்வளவு காலத்திற்குத் தொடரும் என்பதே தாவீதின் கேள்வியாக இருந்தது. நெருக்கடியான சூழலில் இருந்து நாம் ஜெபித்தும் தேவன் நமது ஜெபத்திற்குப் பதிலளிக்காவிட்டால் அவர் நம்மைக் கைவிட்டுவிட்டார் என்று எண்ணுகிறோம். மனிதர்கள் நம்மைக் கைவிட்டு நாம் தனிமைப்படும்போதும், இத்தகைய உணர்வு நமக்கு ஏற்படுகிறது. தேவன் தன்னை உதாசீனப்படுத்துவதாகவும், அவர் தன்னை நிரந்தரமாகக் கைவிட்டுவிட்டார் என்றும் தாவீது நினைத்தான்.

13:2 தனிமைப்பட்ட நிலையில் எவ்வளவு காலத்திற்கு சவுலின் கைக்கு எப்படி தப்பலாம் என்று யோசனை பண்ணிக்கொண்டிருப்பது என்று கேட்கின்றான். எதிரியை சமாளிப்பதற்குத் தாவீது பல்வேறுவிதமான திட்டங்களைத் தீட்டவேண்டியவனாக இருந்தான். எவ்வளவு காலத்திற்குத் தன் எதிரி தன்னை இவ்வாறு துரத்திக் கொண்டிருப்பான் என்று தாவீது விரக்தியடைந்தான்.

# தேவன் தன்னைக் கைவிட்டுவிட்டார் என்று தாவீது உணர்ந்ததற்கோ, அவன் உயிருக்குப் பயந்து ஓடிப்போகவேண்டியதாயிருந்ததற்கோ பாவம் காரணமாக இருக்கவில்லை. இச்சங்கீதத்தில், பாவத்தைப் பற்றியோ மனந்திரும்புதலைப் பற்றியோ எவ்வித குறிப்பும் இல்லை. மேலும் தேவன் தாவீதைக் கைவிடவில்லை. (எபி.13:5, மத்.28:20, ஏசா.43:2). தாவீதே தன்னுடைய நெருக்கடியான சூழ்நிலையில் இத்தகைய உணர்வுடன் இருந்தான்.

## 2. தாவீதின் மன்றாடல் (13:3-4)

சவுலினுடைய மனிதர் எப்படியும் தன்னைக் கொன்றுவிடுவார்கள் என்னும் எண்ணத்துடன் இருந்த தாவீது (1சாமு.27:1), தன்னைக் காப்பாற்றும்படி தேவனிடம் மன்றாடினான். ஆபத்தான சூழ்நிலைகளில் ஆண்டவரை நோக்கிப் பார்ப்பதைத் தவிர வேறு வழிகள் எதுவும் இல்லை என்பதைத் தாவீது அறிந்திருந்தமையால் அவன் மனித உதவியை நாடாமல், தன் உயிரைக் காப்பாற்றும்படி தேவனிடம் மன்றாடினான்.

13:3. தேவன் தன்னைப் பார்க்காமல் தம்முடைய முகத்தை வேறுபக்கமாகத் திருப்பிக் கொண்டிருப்பதாக எண்ணிய தாவீது (13:1), தன்னை நோக்கிப் பார்க்கும்படி தேவனிடம் மன்றாடுகிறான்.

# "எனக்கு செவிகொடுத்தருளும்" என்னும் கோரிக்கை, முதலிரு வசனங்களிலும் அதாவது எவ்வளவு காலத்திற்கு என்னை மறந்திருப்பீர்? என்னும் கேள்விக்கு பதிலளிக்கும்படியான விண்ணப்பமாக உள்ளது.

#"கண்களைத் தெளிவாக்கும்." துயரம் காரணமாக எதைப் பற்றியும் தெளிவாகப் பார்க்கவும் சிந்திக்கவும் முடியாதவனாக தாவீது இருந்தான். சரீரம் பலவீனப்படும்போது கண்கள் மங்குவதாகவும், சரீரம் பலமும் புத்துணர்ச்சியும் அடையும்போது கண்கள் தெளிவடைவதாகவும் கூறுவது எபிரேய மொழிவழக்கு (1சாமு.14:27,29, எஸ்.9:8). தாவீது சரீரப்பிரகாரமாக பலவீனமாகவும் வியாதிப்பட்டவனாகவும் இருந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

13:4. தன்னுடைய மரணம் தன் எதிரிக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தும் என்பதனால், அப்படி ஒரு நிலை ஏற்படக்கூடாது என்னும் எண்ணத்தில் தாவீது தன்னைக் காப்பாற் றும்படி மன்றாடினான் (சங்.35:19-21, 38:16-17). இது சுயநலமான கோரிக்கை அல்ல, தேவனுடைய கனத்தைக் கருத்திற்கொண்டு ஏறெடுக்கப்பட்ட ஜெபமாகும். தேவனை நம்பிவாழும் மனிதனுக்கு ஏற்படும் தோல்வியை தேவநாமத்திற்கு ஏற்படும் கனவீனமா கத் தாவீது எண்ணினான். மோசேயும் இதேவிதமாக ஜெபித்துள்ளார் (எண்.14:15-16).

## 3. தாவீதின் மனமகிழ்ச்சி (13:5-6)

தன்னுடைய நிலைமையைத் தேவனிடம் தெரிவித்து, தன்னைக் காப்பாற்றும்படி ஜெபித்த தாவீது, அதுவரை காலமும் இருந்த மனக்குழப்பம் நீங்கியவனாக நம்பிக்கையும் மகிழ்ச்சியும் அடைந்தான். நம்முடைய மனப்பாரத்தை, பிரச்சனையைத் தேவனிடம் தெரிவிக்கும்போது, தேவன் நமக்கு மனஆறுதலையும் சமாதானத்தையும், சந்தோஷத்தையும் தருகிறவராக இருக்கின்றார். தேவன் தாவீதின் சூழ்நிலையை அல்ல தாவீதின் உள்ளத்தின் நிலையை மாற்றினார்.

13:5. கிருபை என்பது மூலமொழியில் அன்பு என்றே உள்ளது. நெருக்கடியான சூழ்நிலையிலும் தேவன் தன்னை நேசிக்கின்றார் என்பதைத் தாவீது அறிந்திருந்தான். தேவன் தன்னை நேசிப்பதனால் அவர் தன்னை நிச்சயம் சவுலின் மனிதர்களிடமிருந்து விடுவிப்பார் என்னும் நம்பிக்கை அவனுக்கு இருந்தது. ஆரம்பத்தில் தேவன் தன்னைக் கைவிட்டுவிட்டார் என்று புலம்பியவன், தன்னுடைய மனக்குமுறலைத் தேவனிடம் தெரிவித்த பின்னர் அவர் தன்னை நேசிக்கிறார், தன்னை விடுவிப்பார் என்பதை அறிந்துகொண்டான். தேவன் அன்பாகவே இருக்கின்றார் (1யோவா.4:8). தேவன் பவுலை நேசித்ததுபோல (ரோ.8:36-39), நெருக்கடியான சூழ்நிலைகளிலும் அவர் நம்மை நேசிக்கின்றார் என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

13:6. தேவன் கடந்த காலத்தில் தனக்கு செய்த நன்மைகளை நினைவு கூர்ந்த தாவீது, தேவனை மகிமைப்படுத்திப் பாடல்களைப் பாடினான். ஆபத்தான சூழ்நிலை யிலும் தேவன் தன்னைக் காப்பாற்றுவார் என்னும் நம்பிக்கையில் மகிழ்ச்சியுடன் பாடல்களைப் பாடுகிறான். தேவன் செய்தவைகளை நினைவுகூருவது தேவன் மீதான நம்பிக்கையை அதிகரிக்கும்.

# நமது நிலைமையைத் தேவனிடம் தெரிவித்து, அவரால் மட்டுமே நம்முடைய நெருக் கடியான சூழ்நிலையை மாற்றமுடியும் என்று விசுவாசத்தோடு நாமும் ஜெபிப்போம்.